# GEAR UP SERIES
# TEST X – 6, 7, 8TH STD GENERAL TAMIL
# (OLD & NEW SAMACHEER)

1. நான்மணிமாலை என்பது
   a. பதினெண் மேல்கணக்கு நூல்களுள் ஒன்று
   b. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
   c. தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் ஒன்று
   d. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
   e. விடை தெரியவில்லை

2. குழந்தையின் பதின்மூன்றாம் திங்களில் நிகழும் பருவம்
   a. காப்பு   b. செங்கீரை   c. வருகை
   d. அம்புலி   e. விடை தெரியவில்லை

3. மதுரையை 'நான்மாடக்கூடல்' என அழைக்கக் காரணம்
   1. நான்கு திருக்கோவில்கள் சேர்ந்தமையால்
   2. நான்கு திருக்கோயில்களும் மதுரைக்குக் காவலாக அமைந்ததால்
   3. நான்கு மேகங்களும், நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்தமையால்
   4. மதுரையில் எழுந்தருளிய ஈசன் ஆலமர நிழலில் வீற்றிருந்ததால்
   a. அனைத்தும் சரி   b. 1, 2, 3 மட்டும் சரி
   c. அனைத்தும் தவறானவை   d. 1, 2 மட்டும் சரி
   e. விடை தெரியவில்லை

4. கம்பராமாயணத்திலுள்ள ஆற்றுப்படலம் எந்த காண்டத்தில் அமைந்துள்ளது?
   a. பாலகாண்டம்   b. அயோத்தியா காண்டம்
   c. சுந்தர காண்டம்   d. யுத்த காண்டம்
   e. விடை தெரியவில்லை

5. பட்டியல் II பட்டியல் II உடன் பொருத்துக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. 'புரம்' | 1. கடற்கரைச் சிற்றூர்கள் |
| B. பட்டினம் | 2. கடற்கரை நகரங்கள் |
| C. பாக்கம் | 3. நெய்தல் நிலத்தின் வாழ்விடங்கள் |
| D. குப்பம் | 4. சிறந்த ஊர்கள் |

A B C D

| | | | | |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 4 | 2 | 1 | 3 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

6. விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்
a. 3 b. 4 c. 2 d. 6 e. விடை தெரியவில்லை

7. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க ___________.
a. கோல், தோள், பால், வாள், வேல்
b. பால், கோல், வேல், வாள், தோள்
c. வேல், பால், கோல், தோல், வாள்
d. கோல், தோள், வேல், பால், வாள்
e. விடை தெரியவில்லை

8. தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை - என்று பாடியவர் யார்?
a. நக்கீரனார் b. மருதனிளநாகனார் c. நல்லூர் நத்தத்தனார்
d. சேந்தம்பூதனார் e. விடை தெரியவில்லை

9. பொருத்துக
A. சேக்ஸ்பியர் 1. கிரேக்கச் சிந்தனையாளர்
B. மில்டன் 2. ஆங்கில நாடக ஆசிரியர்
C. பிளேட்டோ 3. வடமொழி நாடக ஆசிரியர்
D. காளிதாசர் 4. ஆங்கிலக் கவிஞர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 2 | 4 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

10. ஒருவருக்கு ஒளியாக அமைவதாக திருவள்ளுவர் கூறுவது எது?
a. பெருமை b. ஊக்கம் c. நாடு
d. கல்வி d. விடை தெரியவில்லை
According to Valluvar what is light of life?
a. Greatness b. Mental energy c. Country
d. Education e. Answer not known

11. தேவநேயப்பாவாணர் பெற்ற சிறப்புப் பெயர்களின் எண்ணிக்கை
a. 176 b. 174 c. 191 d. 134 e. விடை தெரியவில்லை


PH: 044 - 24339436, 42867555, 9840226187

12. நான்மணிமாலை எவ்வகையான மணிகளால் செய்யப்பட்டிருக்கும்?
a. முத்து, பவளம், வைடூரியம், கோமேதகம்
b. முத்து, பவளம், வைரம், வைடூரியம்
c. முத்து, பவளம், மரகதம், மாணிக்கம்
d. முத்து, வைரம், மரகதம், புட்பராகம்
e. விடை தெரியவில்லை

13. குன்றக்குடி அடிகளார் முடியரசனுக்கு வழங்கிய பட்டம் என்ன?
a. கவிமுரசு b. கவிக்குயில் c. கவிப்பேரரசு
d. கவியரசு e. விடை தெரியவில்லை

14. "ஓ" என்ற உயிரெழுத்து கீழ்க்காணும் எந்த வகையில் எழுதப்படுகிறது? ________
a. வலஞ்சுழி b. சுழல்வழி c. நேர்சுழி
d. இடஞ்சுழி e. விடை தெரியவில்லை

15. ஓவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்றுப் புலமைபெற்ற ஆசிரியர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?
a. ஓவியப் புலவன் b. கண்ணுள் வினைஞர் c. ஓவிய மாக்கள்
d. இவர்கள் யாருமில்லை e. விடை தெரியவில்லை

16. வில்லிபுத்தூராரை ஆதரித்தவர் யார்?
a. சடையப்ப வள்ளல் b. வரபதி ஆட்கொண்டான்
c. சந்திரன் சுவர்க்கி d. கடிகை முத்துப் புலவர்
e. விடை தெரியவில்லை

17. "அலர்தார்" என்னும் சொல்லின் பொருளைத் தேர்ந்தெடுக்க
a. வாழைத்தார் b. மலர்மாலை c. வாழைக்குலை
d. மலர்க்கொத்து e. விடை தெரியவில்லை

18. நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர் என ஓவியருக்கு இலக்கணம் வகுத்தவர் யார்?
a. அடியார்க்கு நல்லார் b. நச்சினார்க்கினியர்
c. பரிமேலழகர் d. நா.மு.வேங்கடசாமி
e. விடை தெரியவில்லை

19. நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் ஆதலின் - இவ்வரிகள் இடம் பெற்றுள்ள நூல்
a. தொல்காப்பியம் b. புறநானூறு c. சிலப்பதிகாரம்
d. திருக்குறள் e. விடை தெரியவில்லை

20. ஒருவருக்குப் பெருமை குணத்தால் வரும் - இதற்கு பொருத்தமான குறளை தேர்ந்தெடுக்க.
a. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்
b. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்
c. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு

d. பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்

e. விடை தெரியவில்லை

"For one, his greatness is in his character' – Find out the Kural which conveys the above meaning

a. All men that live are one in circumstances of birth;
Diversities of works give each his special worth.

b. The men of lofty line, whose souls are mean, are never great
The men of lowly birth, when high of soul, are not of low estate.

c. Like single-hearted women, greatness too,
Exists while to itself is true.

d. The man endowed with greatness true,
Rare deeds in perfect wise will do.

e. Answer not known

21. வருகைப் பருவம் குழந்தைகளின் __________ நிகழ்வது ஆகும்

a. பதின்மூன்றாம் நாளில்
b. பதின்மூன்றாம் மாதத்தில்
c. பதின்மூன்றாம் வாரத்தில்
d. பதின்மூன்றாம் வயதில்
e. விடை தெரியவில்லை

22. இன எழுத்துகள் எனப்படுபவை
கூற்று 1 : ஒலிக்கும் முயற்சியால் ஒன்றுபட்டவை
கூற்று 2 : பிறக்கும் இடத்தால் ஒற்றுபட்டவை

a. கூற்று 1ம், 2ம் தவறு
b. கூற்று 2 மட்டும் தவறு
c. கூற்று 1ம், 2 ம் சரி
d. கூற்று 2 மட்டும் சரி
e. விடை தெரியவில்லை

23. பிள்ளைப் பெருவிண்ணப்பம் என்னும் பகுதி பின்வரும் எந்த நூலினுள் அமைந்துள்ளது?

a. திருவருட்பா
b. தேம்பாவணி
c. திருமந்திரம்
d. வில்லிபாரதம்
e. விடை தெரியவில்லை

24. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனாரின் அடைமொழிப் பெயரைக் கண்டறிக.

a. புரட்சிக் கவிஞர்
b. மக்கள் கவிஞர்
c. படிமக்கவிஞர்
d. உவமைக் கவிஞர்
e. விடை தெரியவில்லை

25. தமிழ் நாடகத் தந்தை எழுதிய நாடகம் எது?

a. மதங்க சூளாமணி
b. மனோகரன்
c. இலவகுசா
d. அபிமன்யு
e. விடை தெரியவில்லை

26. ஜி.யு.போப் தொகுத்த தமிழ்ச் செய்யுட் கலம்பம் என்னும் நூல்
a. அகநூல்களை ஆய்ந்து எழுதப்பட்டது
b. அறநூல்களை ஆய்ந்து எழுதப்பட்டது
c. இலக்கண நூல்களை ஆய்ந்து எழுதப்பட்டது
d. நாட்டுப்புறப் பாடல்களை ஆய்ந்து எழுதப்பட்டது
e. விடை தெரியவில்லை

27. "இலை" இச்சொல்லில் ஐ என்னும் எழுத்திற்கான இன எழுத்து __________.
a. இ b. லை c. ல d. ளை e. விடை தெரியவில்லை

28. "தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த்" என்று அழைக்கப்பட்டவர்
a. பாவலரேறு b. புலவரேறு c. பாவலர்மணி
d. புரட்சிக்கவி e. விடை தெரியவில்லை

29. குறவஞ்சி நாடகங்கள் தோன்றிய காலம்
a. சோழர் காலம் b. நாயக்கர் காலம் c. பல்லவர் காலம்
d. பாண்டியர் காலம் e. விடை தெரியவில்லை

30. பெருமை _______ இன்மை சிறுமை
_____ ஊர்ந்து விடல்
a. பெருமிதம், பெருமிதம் b. பெருமிதம், சிறுமிதம்
c. சிறுமிதம், பெருமிதம் d. சிறுமிதம், சிறுமிதம்
e. விடை தெரியவில்லை
______ is absence of conceit; meanness, we deem,
Riding on car of vanity _______
a. Greatness, Supreme b. Greatness, Meanness
c. Meanness, Greatness d. Meanness, Meanness
e. Answer not known

31. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய நாடகங்கள்
a. குறவஞ்சி நாடகங்கள் b. நொண்டி நாடகங்கள்
c. இதிகாச நாடகங்கள் d. சமுதாய சீர்த்திருத்த நாடகங்கள்
e. விடை தெரியவில்லை

32. அறநூல்கள் எவற்றை விளக்கவில்லை?
a. நாம் மறுக்க வேண்டிய நற்பண்புகளை
b. நாம் கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகளை
c. நாம் ஒழுக வேண்டிய நற்பண்புகளை
d. நாம் பின்றபற்ற வேண்டிய நற்பண்புகளை
e. விடை தெரியவில்லை

33. "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" எனத் தொடங்கும் தமிழ் மூவாயிரம் பாடல் எந்த தந்திரத்தில் அமைந்துள்ளது?
a. இரண்டாம் தந்திரம் b. ஐந்தாம் தந்திரம் c. மூன்றாம் தந்திரம்
d. முதல் தந்திரம் e. விடை தெரியவில்லை

34. நாடகத்தமிழ் என்ற நூலை எழுதியவர் யார்?

a. பரிதிமாற் கலைஞர் b. பம்மல் சம்பந்தனார் c. மறைமலையடிகள்
d. சங்கரதாஸ் சுவாமிகள் e. விடை தெரியவில்லை

35. பிள்ளைத்தமிழ் பருவங்களின் சரியான வைப்புமுறையைக் கண்டறிக.
a. தால், முத்தம், அம்புலி, வருகை, சப்பாணி
b. தால், வருகை, முத்தம், சப்பாணி, அம்புலி
c. வருகை, முத்தம், சப்பாணி, தால், அம்புலி
d. தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி
e. விடை தெரியவில்லை

36. மயங்கொலிப் பிழையற்ற தொடரைக் காண்க.
a. கதவு மெள்ளத் திறந்தது b. திருவிளாத் தேர் வந்தது
c. பறவை வானில் பரந்தது d. பூ மணம் வீசியது
e. விடை தெரியவில்லை

37. தவறாகப் பொருந்தியுள்ளதைக் கண்டறிக.
a. பேனா - தூவல்
b. சன்னல் - நெடும்பேழை
c. ரப்பர் - தேய்ப்பம்
d. கைது - தளை
e. விடை தெரியவில்லை

38. சேக்சுபியரின் ஆங்கில நாடகங்களை மொழிபெயர்த்தவர் யார்?
a. தமிழ்நாடகத் தலைமையாசிரியர் b. தமிழ்நாடகத் தந்தை
c. தமிழ் நாடக மறுமலர்ச்சித் தந்தை d. ஔவை சண்முகனார்
e. விடை தெரியவில்லை

39. புகழேந்திப் புலவர் பற்றி பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து விடையளிக்க.
I. வரகுணப் பாண்டியனின் அவைப்புலவராக பணியாற்றினார்.
II. வெண்பா பாடுவதில் புகழ்பெற்று விளங்கினார்.
III. கம்பர், ஒட்டக்கூத்தர், வில்லிப்புத்தூரார் போன்றோர் இவர் காலத்தில் வாழ்ந்தவர்கள் ஆவர்.
IV. இவர் தன்னை ஆதரித்த சந்திரன் சுவர்க்கியை நளவெண்பாவில் பல இடங்களில் நினைவுகூர்ந்து பாடியுள்ளார்
a. I, III மட்டும் சரி b. II, IV மட்டும் தவறு c. I, II மட்டும் சரி
d. I, II, III மட்டும் சரி e. விடை தெரியவில்லை

40. பெருமை பிறருடைய குறையை __________ சொல்லும்
a. குற்றமாக b. பெருமையாக c. மறைத்து
d. இவை ஏதுமில்லை d. விடை தெரியவில்லை
Greatness will __________ a neighbour's shame
a. Find fault b. Glorify c. Hide
d. None of these e. Answer not known

41. நான் கண்ட பாரதம் என்னும் நூலை எழுதியவர்
a. அஞ்சலையம்மாள் b. அம்புஜத்தம்மாள் c. வள்ளியம்மை

d. தருமாம்பாள் e. விடை தெரியவில்லை

42. இயற்கையோடு இணைந்து வாழ்வதே தமிழரின் வாழ்க்கை முறை – தொடர்புடைய வினாவினைக் காட்டுக,
a. தமிழரின் வாழ்ககை முறையோடு ஒத்தவர்கள் யார்?
b. இயற்கையோடு இணைந்து ஏன் வாழ வேண்டும்?
c. இயற்கையோடு இணைந்து எப்படி வாழ வேண்டும்?
d. தமிழரின் வாழ்க்கை முறை எத்தகையது?
e. விடை தெரியவில்லை

43. பொம்மலாட்டமாக வளர்ச்சியடைந்த பழங்கால கூத்துவகை எது?
a. தோல்பாவைக்கூத்து b. நிழற்பாவைக் கூத்து c. மரப்பாவைக்கூத்து
d. இவை எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

44. பொருத்துக:
A. கூத்தர்க்கு நாடு 1. ஆய்
B. வந்தவர்க்கு ஊர்கள் 2. நள்ளி
C. இல்லறத்திற்குப் பொருள் 3. காரி
D. இரவலர்க்கு குதிரை 4. ஓரி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 3 | 1 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

45. வினா எழுத்து அல்லாத ஒன்றை அடையாளப் படுத்துக ________.
a. ஏ b. உ c. ஓ d. ஆ e. விடை தெரியவில்லை

46. நாடகமேத்தும் நாடகக் கணிகை என்று மாதவியை குறிப்பிட்டவர் யார்?
a. இரா.பி. சேதுப்பிள்ளை b. இளங்கோவடிகள்
c. சீத்தலைச்சாத்தனார் d. ம.பொ. சிவஞானம்
e. விடை தெரியவில்லை

47. “குகைசெய் யின்பெழக் கோலமிட் டெர்த்ததே” என்னும் தேம்பாவணிப் பாடல் எந்தப் படலத்தில் இடம்பெற்றுள்ளது?
a. வளன் சனித்த படலம் b. மகவருள் படலம்
c. மகன் நேர்ந்த படலம் d. பிரிந்த மகவைக்காண் படலம்
e. விடை தெரியவில்லை

48. கோமுகி என்பதன் பொருள் __________.
a. காளை மாடு b. பசுவின் முகம் c. தீவு
d. அரசன் மகள் e. விடை தெரியவில்லை

49. பொருத்துக:
A. தமிழின்பம் 1. தேவநேயப்பாவாணர்

B. தமிழ் நெஞ்சம் — 2. கா. கோவிந்தன்
C. சங்கத்தமிழ்ப் புலவர்வரிசை — 3. ரா.பி. சேதுப்பிள்ளை
D. தமிழ் வரலாறு — 4. மு. வரதராசன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 2 | 3 | 4 | 1 |

e. விடை தெரியவில்லை

50. சிறப்புகள் சிறியாரிடத்துச் சேருமாயின் நெறிகடந்த செயல்களே நடக்கும் எனக்கூறும் குறள் எது?
a. இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின்
b. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னும் நோக்கு
c. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து
d. பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்
e. விடை தெரியவில்லை

Even nobility of birth, wealth and learning if in the base will produce ever increasing pride. – Find out the Kural
a. Whene'er distinction lights on some unworthy head,
Then deeds of haughty insolence are bred.
b. 'As votaries of the truly great we will ourselves enroll,'
Is thought that enters not the mind of men of little soul.
c. Greatness humbly bends, but littleness always
Spreads out its plumes, and loads itself with praise.
d. Greatness is absence of conceit; meanness, we deem,
Riding on car of vanity supreme.
e. Answer not known

51. "பாரிடைத் துயில்வோர் கண்ணில் பாய்ந்திடும் எழுச்சி நீ தான்" என்று பாரதிதாசன் எதனைக் குறிப்பிடுகிறார்?
a. தொலைக்காட்சியை  b. பத்திரிக்கையை  c. இலக்கண நூல்களை
d. சூரியனை  e. விடை தெரியவில்லை

52. "கும்பி" என்பதன் பொருள் _________.
a. வயிறு  b. கால்  c. தலை
d. கை  e. விடை தெரியவில்லை

53. "வலக்கை தருவது இடக்கைக்குத் தெரியக் கூடாது" என்னும் முதுமொழிக்கு எடுத்துகாட்டாக வாழந்தவர் யார்?
a. ரா.பி. சேதுப்பிள்ளை  b. கா. கோவிந்தன்

c. அறிஞர் அண்ணா  d. மு. வரதராசன்
e. விடை தெரியவில்லை

54. மூவருலாவில் பாடப்பெறும் மன்னர்கள்
a. சேரர்கள்  b. சாளுக்கியர்கள்  c. சோழர்கள்
d. பாண்டியர்கள்  e. விடை தெரியவில்லை

55. நவிற்சி என்பதன் பொருள் ____________.
a. கவனித்தல்  b. எண்ணுதல்  c. கூறுதல்
d. எழுதுதல்  e. விடை தெரியவில்லை

56. ஆமூர் மல்லனுக்கும், நற்கிள்ளிக்கும் இடையே நடைபெற்ற வீரவிளையாட்டைக் கூறும் நூல்
a. பரிபாடல்  b. புறநானூறு  c. நெடுந்தொகை
d. குறுந்தொகை  e. விடை தெரியவில்லை

57. “அரசு” எவ்வகை குற்றியலுகரம்? ___________
a. இடைத்தொடர்  b. மென்தொடர்  c. உயிர்த்தொடர்
d. வன்தொடர்  e. விடை தெரியவில்லை

58. அண்ணாமலையார் தன்னுடைய காவடிச்சிந்து என்னும் நூலில் யாருடைய சிறப்பைப் பாடுகிறார்?
a. புள்ளிருக்குவேலூரில் அமைந்துள்ள முருகன்
b. கழுகுமலையில் கோவில் கொண்டுள்ள முருகன்
c. பழமுதிர்ச்சோலையில் எழுந்தருளியுள்ள முருகனை
d. சுவாமிமலையில் குடிகொண்டுள்ள முருகனை
e. விடை தெரியவில்லை

59. பொருத்துக:

A. கசடு  1. தோண்டத்தோண்ட
B. மாடு  2. கற்கக்கற்க
C. தொட்டனைத்து  3. செல்வம்
D. மதோன்மத்தர்  4. சிவபெருமான்
5. குற்றம்
6. முருகன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 5 | 3 | 2 | 4 |
| b. | 5 | 3 | 2 | 6 |
| c. | 5 | 3 | 1 | 6 |
| d. | 5 | 3 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

60. எவை நான்கும் அரண்?
a. நீர், நிலம், மலை, நெருப்பு  b. நீர், நிலம், மழை, காடு
c. மழை, நிலம், காடு, நீர்  d. நீர், நிலம், மலை, காடு

 PH: 044 - 24339436, 42867555, 9840226187

e. விடை தெரியவில்லை

What four makes a fort?

a. Water, open space, Hill, Fire
b. Water, open space, rain, forest
c. Rain, open space, forest, water
d. Water, open space, hill, forest
e. Answer not known

61. கோட்டோவியம் என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது
a. கோடு + ஓவியம் b. கோட்டு + ஓவியம்
c. கோட் + டோவியம் d. கோடி + ஓவியம்
e. விடை தெரியவில்லை

62. அம்புஜத்தம்மாள் பற்றிய கூற்றுகளில் தவறானதைக் கண்டறிக.
a. பாரதியார் பாடல்களைப்பாடி விடுதலை உணர்வை ஊட்டினார்.
b. சீனிவாச காந்தி நிலையம் என்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி வந்தார்.
c. தென்னாட்டின் ஜான்சிராணி என்று அழைக்கப்பெற்றார்.
d. 1964-ம் ஆண்டு தாமரைத்திரு விருது பெற்றுள்ளார்
e. விடை தெரியவில்லை

63. பின்வருவனவற்றுள் இனமில்லா அடைமொழியைக் கண்டறி.
a. பாற்குடம் b. ஊர்மன்றம் c. செஞ்ஞாயிறு
d. பூமரம் e. விடை தெரியவில்லை

64. வேயரமாடம் எனப்படுவது?
a. வைக்கோலால் வேயப்படுவது b. சாந்தினால் பூசப்படுவது
c. ஓலையால் வேயப்படுவது d. துணியால் மூடப்படுவது
e. விடை தெரியவில்லை

65. காந்தியடிகளால் ‘லீலாவதி’ என்று அழைக்கப்பட்டவர் யார்?
a. அஞ்சலையம்மாள் b. தில்லையாடி வள்ளியம்மை
c. அம்புஜத்தம்மாள் d. அம்மாக்கண்ணு
e. விடை தெரியவில்லை

66. இலண்டனிலுள்ள எந்த கல்லூரியில் இராமானுஜம் ஆராய்ச்சி மாணவராகப் சேர்ந்தார்?
a. ஆக்ஸ்போர்டு b. ஹார்வார்டு c. திரினிட்டி
d. இம்பீரியல் e. விடை தெரியவில்லை

67. “இரசம் என்பது வடசொல்; சாறு என்று கூறலாமே” என்று மு. கதிரேசனாரிடம் வேண்டுகோள் விடுத்தவர் யார்?
a. நீலாம்பிகை அம்மையார் b. கமலாம்பிகை அம்மையார்
c. அசலாம்பிகை அம்மையார் d. மணியம்மையார்
e. விடை தெரியவில்லை

68. உரவுநீர் <u>அழுவம்</u> இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்
a. காற்று b. வானம் c. கடல்
d. மலை e. விடை தெரியவில்லை

69. எந்த மன்னரின் வேண்டுதலுக்கிணங்க சந்திரசேகர கவிராசப் பண்டிதர் தனிப்பாடல் திரட்டைத் தொகுத்தார்?

a. பாளையங்கோட்டை b. இராமநாதபுரம் c. தஞ்சாவூர்
d. மைசூர் e. விடை தெரியவில்லை

70. நூலோர் அரணுக்குத் தேவையான நான்கு என எதனைக் கூறுவர்?

a. உயர்வு, அகலம், நீளம், திடம்
b. உயர்வு, அகலம், திடம், அருமை
c. உயர்வு, அகலம், திடம், நீளம்
d. உயர்வு, அகலம், நீளம், நீர்
e. விடை தெரியவில்லை

According to learned what four makes a fortress?

a. Height, breath, length, strength
b. Height, breath, strength, inaccessibility
c. Height, breath, strength, length
d. Height, breath, length, water
e. Answer not known

71. பொருத்துக:

A. நிகண்டுகளில் சிறப்பானது — 1. சதுரகராதி
B. நிகண்டுகளில் பழைமையானது — 2. சூடாமணி நிகண்டு
C. தமிழின் முதல் அகரமுதலி — 3. அபிதான கோசம்
D. தமிழ்க் கலைக்களஞ்சியங்களின் முன்னோடி — 4. அபிதான சிந்தாமணி
5. சேந்தன் திவாகரம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 5 | 2 | 1 | 4 |
| b. | 2 | 5 | 4 | 1 |
| c. | 2 | 5 | 1 | 3 |
| d. | 2 | 5 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

72. பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகிய வருவது ____________.

a. பொருளாகு பெயர் b. சினையாகு யெர்
c. பண்பாகு பெயர் d. இடவாகு பெயர்
e. விடை தெரியவில்லை

73. இங்கிலாந்து நாட்டுக் காட்சிச்சாலையில் திருக்குறளுடன் இடம்பெற்றுள்ள நூல் எது?

a. விவிலியம் b. கம்பராமாயணம் c. பகவத்கீதை
d. சத்தியசோதனை e. விடை தெரியவில்லை

74. ”ஞானச்சுடர்” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

a. ஞான + சுடர் b. ஞானச் + சுடர் c. ஞானம் + சுடர்
d. ஞானி + சுடர் e. விடை தெரியவில்லை

75. "இராமானுஜன்தான் இந்த 20-ம் நூற்றாண்டின் மிகப்பெரிய கணிதமேதை" என்று இராமானுஜத்தைப் பாராட்டியவர்

a. பேரா. ஈ.டி.பெல் b. லார்ட்மெண்ட் லண்ட்

c. சூலியல் வின்சோன் d. சூலியன் கச்சுலி

e. விடை தெரியவில்லை

76. ந. பிச்சமூர்த்தி கவிதைகளில் இடம்பெற்றுள்ள மொத்த கவிதைகளின் எண்ணிக்கை

a. 87 b. 81 c. 83 d. 101 e. விடை தெரியவில்லை

77. விசும்பு பொருள் தருக.

a. நிலம் b. வானம் c. மரம் d. நீர் e. விடை தெரியவில்லை

78. திருக்குற்றால மக்கள் தேடும் பொருள்கள் எவை?

a. செல்வம், உயர்வு b. அறம், செல்வம் c. அறம், பெருமை

d. கல்வி, அறிவு e. விடை தெரியவில்லை

79. பொருத்துக:

A. கலம் 1. இடைப்போலி

B. மயல் 2. இறுதிப்போலி

C. அஞ்சு 3. முற்றுப்போலி

D. இலஞ்சி 4. முதற்போலி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

80. பின்வரும் குறளில் வினைமாட்சி என்பதன் பொருள் யாது?

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்

a. செயல் திறன் b. செயல் வகை

c. பொருள் செயல்வகை d. வினைத் தூய்மை

e. விடை தெரியவில்லை

enaimaatchith thaakiyak kaNNum vinaimaatchi
illaarkaN illadhu araN

In this Kural what is the meaning of the term vinaimaatchi?

a. Excellence of action b. Modes of Action

c. way accumulating wealth d. purity in action

e. Answer not known

81. தழா அல் பொருள் தருக.

a. பயன்படுத்துதல் b. கட்டுப்படுத்துதல்

c. நடைமுறைப்படுத்துதல் d. துரிதப்படுத்துதல்

e. விடை தெரியவில்லை

82. பொருத்துக:

| | | |
|---|---|---|
| A. அல்லவை | | 1. விரும்பி |
| B. அமர் | | 2. வறுமை |
| C. அமர்ந்து | | 3. பாவம் |
| D. அளைஇ | | 4. விருப்பம் |
| E. துவ்வாமை | | 5. கலந்து |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 5 | 2 | 3 |
| b. | 3 | 4 | 1 | 5 | 2 |
| c. | 5 | 2 | 4 | 3 | 1 |
| d. | 2 | 5 | 1 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

83. பின்வருவனவற்றுள் பஞ்சகவ்வியத்தில் இல்லாதது எது?
a. சாணம் b. மோர் c. நெய் d. தயிர் e. விடை தெரியவில்லை

84. பொருத்துக:

| | |
|---|---|
| A. க், ங் | 1. நாவின் இடை, அண்ணத்தின் இடை |
| B. ச், ஞ் | 2. நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி |
| C. ட், ண் | 3. நாவின் முதல் அண்ணத்தின் அடி |
| D. த், ந் | 4. நாவின் நுனி, அண்ணத்தின் நுனி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 2 | 3 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

85. பொருத்துக:

| | |
|---|---|
| A. 1939 | 1. உ.வே.சா. நூல்நிலையம் |
| B. 1937 | 2. தேர்தலில் முத்துராமலிங்கரின் வெற்றி |
| C. 1942 | 3. நேதாஜியின் மதுரை வருகை |
| D. 1995 | 4. உ.வே.சா-வுக்கு அஞ்சல் தலை |
| E. 2006 | 5. முத்துராமலிங்கருக்கு அஞ்சல் தலை |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 5 | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 1 | 4 | 5 | 2 |
| c. | 5 | 2 | 4 | 3 | 1 |
| d. | 3 | 2 | 1 | 5 | 4 |

e. விடை தெரியவில்லை

86. அழகிய சொக்கநாதப் புலவர் வாழ்ந்த நூற்றாண்டு எது?
a. 17-ம் நூற்றாண்டு b. 18-ம் நூற்றாண்டு c. 19-ம் நூற்றாண்டு
d. 14-ம் நூற்றாண்டு e. விடை தெரியவில்லை

87. மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள் எனக் குறிப்பிட்டவர் யார்?

a. காந்தியடிகள் b. முத்துராமலிங்கத் தேவர் c. பெரியார்
d. விவேகானந்தர் e. விடை தெரியவில்லை

88. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிகேற்ப முழவை மீட்டுவது ________.
a. கடல் b. ஓடை c. குளம் d. கிணறு e. விடை தெரியவில்லை

89. பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமுதாயப் பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பியவர் யார்?
a. இராமச்சந்திர கவிராயர் b. பகுத்தறிவுக் கவிராயர் c. புரட்சிக்கவி
d. மகாகவி e. விடை தெரியவில்லை

90. அதிகார எண் 74 __________
a. பெருமை b. அரண் c. நாடு
d. ஏதுமில்லை e. விடை தெரியவில்லை
Chapter 75 is __________
a. Greatness b. The Fortification c. The Land
d. None of these e. Answer not known

91. பின்வருவனவற்றுள் கடுவெளிச்சித்தரின் கூற்றில் இடம்பெறாததைக் கண்டறிக.
a. வேம்பினை உலகில் ஊட்டாதே! b. போற்றும் சடங்கை நண்ணாதே!
c. பசிக்கும் முன் உண்ணாதே! d. சாற்றும்முன் வாழ்வை எண்ணாதே!
e. விடை தெரியவில்லை

92. "நன்செய்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது _________.
a. நன்மை + செய் b. நன் + செய் c. நன்மைச் + செய்
d. நல்லது + செய் e. விடை தெரியவில்லை

93. பொருத்துக:
A. லய ஒலி 1. வீணை
B. மீட்டொலி 2. புல்லாங்குழல்
C. நல்லொலி 3. மத்தளம்
D. கான ஒலி 4. நாதஸ்வரம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 3 | 1 | 4 | 2 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

94. நேரு இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் தனக்கு மிகவும் பிடித்த எழுத்தாளராக யாரைக் குறிப்பிட்டுள்ளார்?
a. டால்ஸ்டாய் b. பெர்னாட்ஷா c. பெட்ரண்ட் ரஸ்ஸல்
d. மில்டன் e. விடை தெரியவில்லை

95. "தகவிலர்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.
a. தக + விலர் b. தக + இலர் c. தகவு + இலர்

d. தகவு + பலர்  e. விடை தெரியவில்லை

96. பாரதிக்குப்பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவர் யார்?
a. சுரதா  b. ந. பிச்சமூர்த்தி
c. அப்துல் ரகுமான்  d. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
e. விடை தெரியவில்லை

97. விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்
a. ஐந்து  b. நான்கு  c. மூன்று
d. இரண்டு  e. விடை தெரியவில்லை

98. குழந்தைகளின் கல்விக்கு விளக்கைப் போன்றது என விளம்பிநாகனார் எதனைக் குறிப்பிடுகின்றார்?
a. நல்லெண்ணம்  b. நல்லறிவு  c. நன்னடத்தை
d. நல்ல நம்பிக்கை  e. விடை தெரியவில்லை

99. உ.வே.சா. பதிப்பித்த ஐம்பெருங்காப்பிய நூல்களை காலவரிசைப்படுத்துக
a. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி
b. சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை
c. சீவகசிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம்
d. சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை
e. விடை தெரியவில்லை

100. பின்வருவனவற்றுள் நாட்டின் உறுப்புகளாக வள்ளுவர் குறிப்பிடாதது எது?
a. ஆற்றுநீர்  b. ஊற்றுநீர்  c. மழை
d. காடு  e. விடை தெரியவில்லை
Which one of the following is not mentioned by Valluvar to make a land?
a. River water  b. Fountain water  c. Rain
d. Forest  e. Answer not known

101. பொருத்துக:
A. மட்பாண்டம்  1. தோன்றல் விகாரம்
B. மரவேர்  2. இயல்பு புணர்ச்சி
C. மணிமுடி  3. கெடுதல் விகாரம்
D. கடைத்தெரு  4. திரிதல் விகாரம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| d. | 2 | 3 | 4 | 1 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

102. ‘என் சரிதம்’ என்னும் பெயரில் தன் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் யார்?

 PH: 044 - 24339436, 42867555, 9840226187

a. உ.வே.சா b. வெ. இராமலிங்கனார் c. கண்ணதாசன்
d. முடியரசன் e. விடை தெரியவில்லை

103. பிறிது மொழிதல் அணியில் இடம் பெறுபவை
a. உவமேயம் b. உவமை c. தொடை
d. சந்தம் e. விடை தெரியவில்லை

104. தந்தைப் பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்தவர் யார்?
a. முடியரசன் b. பாரதிதாசன் c. வாணிதாசன்
d. பாரதியார் e. விடை தெரியவில்லை

105. தமிழில் தல புராணங்கள் அதிகமாகப் பாடியவர் யார்?
a. உ.வே.சா b. குமரகுருபரர் c. சிவப்பிரகாசர்
d. மீனாட்சி சுந்தரனார் e. விடை தெரியவில்லை

106. இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையையும், வேற்றுமையையும் கூறுவது.
a. உவமையணி b. பிறிது மொழிதல் அணி
c. வேற்றுமையணி d. இரட்டுற மொழிதல் அணி
e. விடை தெரியவில்லை

107. தமிழின் தொன்மையான கலை வடிவம் எது?
a. நாடகம் b. ஓவியம் c. இசை
d. பாட்டு e. விடை தெரியவில்லை

108. பொருத்துக:

| | |
|---|---|
| A. பெரியகுளம் | 1. குமரகுருபரர் |
| B. சங்கரன்கோவில் | 2. அண்ணாமலையார் |
| C. திருவைகுண்டம் | 3. முடியரசன் |
| D. சென்னிகுளம் | 4. தேவநேயப்பாவாணர் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 3 | 1 | 2 | 4 |
| d. | 4 | 2 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

109. இரட்டுற மொழிதல் அணியின் வேறு பெயர்
a. பிறிது மொழிதல் b. வேற்றுமை c. உவமை
d. சிலேடை e. விடை தெரியவில்லை

110. "நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே; மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"
என்ற புறநானூற்று பாடலுக்கு பொருத்தமாக அமையும் குறள் எது?
a. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு
b. பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்

அணியென்ப நாட்டிவ் வைந்து

c. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
   நாட வளந்தரு நாடு

d. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
   வேந்தமை வில்லாத நாடு

e. விடை தெரியவில்லை

Find out the Kural which is equalable to the following lines of Purananooru
"Rice is not life, water is not life!
The king is life for this wide world"

a. Waters from rains and springs, a mountain near, and waters thence;
   These make a land, with fortress' sure defence.

b. A country's jewels are these five: unfailing health,
   Fertility, and joy, a sure defence, and wealth.

c. That is a land that yields increase unsought,
   That is no land whose gifts with toil are bought.

d. Though blest with all these varied gifts' increase,
   A land gains nought that is not with its king at peace.

e. Answer not known

111. தகுதி வழக்குக்குப் பொருந்தாதது எது?

a. இடக்கரடக்கல் b. மங்கலம் c. மரூஉ
d. குழூஉக்குறி e. விடை தெரியவில்லை

112. உலகம் உருண்டை வடிவானது எனக்கூறிய முதல் தமிழ்க்குரல்

a. திருவள்ளுவர் b. கலீலியோ c. நிக்கோலஸ்கிராப்ஸ்
d. கம்பர் e. விடை தெரியவில்லை

113. பொருத்துக:

| | |
|---|---|
| A. நிறை | 1. பொறுமை |
| B. பொறை | 2. விருப்பம் |
| C. மதம் | 3. மேன்மை |
| D. மையல் | 4. கொள்கை |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 1 | 3 | 2 | 4 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

114. க. சச்சிதானந்தன் பற்றிய சரியானக் கூற்றுகளைத் தேர்வு செய்க.
i. மகாவித்துவான் நவநீதகிருட்டின பாரதியாரின் மாணவர்
ii. தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் ஆகிய மூன்று மொழிகளிலும் புலமைப் பெற்றிருந்தார்
iii. கம்பனின் மிடுக்கையும் பாரதியின் சினப்போக்கையும் தமது பாடல்களில் கையாண்டார்
iv. அன்னபூரணி என்ற கவிதைத் தொகுதியையும், ஆனந்தத்தேன் என்ற புதினத்தையும் இயற்றியுள்ளார்.

a. 1, 2, 3 மட்டும் சரி b. 1, 2 மட்டும் சரி c. 1,2, 4 மட்டும் சரி
d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

115. திருவருட்பாவில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை
a. 3615 b. 2034 c. 4350 d. 5818 e. விடை தெரியவில்லை

116. விடும் என்பது ___________ சீர்
a. நேரசை b. நிரையசை c. மூவசை
d. நாலசை e. விடை தெரியவில்லை

117. உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும் - என்று பாடியவர் யார்?
a. இராமலிங்க அடிகள் b. குமரகுருபரர் c. பாரதியார்
d. தாயுமானவர் e. விடை தெரியவில்லை

118. பொருத்துக:

| | |
|---|---|
| A. வெண்பா | 1. துள்ளல் ஓசை |
| B. வஞ்சிப்பா | 2. தூங்கலோசை |
| C. ஆசிரியப்பா | 3. செப்பலோசை |
| D. கலிப்பா | 4. அகவலோசை |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| b. | 4 | 2 | 3 | 1 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 1 | 3 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

119. "பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்" – எனும் தொடர் இடம்பெற்ற நூல்
a. புறநானூறு b. திருமந்திரம் c. பெருங்கதை
d. பதிற்றுப்பத்து e. விடை தெரியவில்லை

120. ________ ஒரு நாட்டின் அரணன்று

a. காடு b. வயல் c. மலை
d. தெளிந்த நீர் e. விடை தெரியவில்லை

_______ is not a defence of a country
a. Forest b. paddy field c. Mountain
d. clear water e. Answer not known

121. திராவிட மொழிகளின் தாய் "தமிழ்" என நிறுவிய கால்டுவெல் மறைந்த இடம்
a. திருநெல்வேலி b. கொடைக்கானல் c. மதுரை
d. கன்னியாகுமரி e. விடை தெரியவில்லை

122. அற்புதமான அறிவுரைக் கதைகள் என்னும் நூலினை எழுதியவர்?
a. இலட்சுமி b. ஜானகி மணாளன் c. ஜயவர்ஷிணி
d. பழநியப்பன் e. விடை தெரியவில்லை

123. அகரவரிசையில் சரியானதைக் கண்டறிக.
a. சிறுவன், சாப்பாடு, செய்தி, சலிப்பு, சோளம்
b. சிறுவன், செய்தி, சலிப்பு, சாப்பாடு, சோளம்
c. சலிப்பு, சிறுவன், சாப்பாடு, சோளம், செய்தி
d. சலிப்பு, சாப்பாடு, சிறுவன், செய்தி, சோளம்
e. விடை தெரியவில்லை

124. அச்சுப்பிழை திருத்தத்தில் டு -என்னும் சொல் குறிப்பது
a. எழுத்தையோ (அ) சொல்லையோ சேர்த்தல் b. இரு புள்ளிகளை சேர்த்தல்
c. பத்திகளை இணைத்தல் d. இடைவெளி விடுதல்
e. விடை தெரியவில்லை

125. திரு.வி.க. இயற்றிய பொதுமை வேட்டல் என்னும் நூலில் எத்தனை தலைப்புகளில் பாடல்கள் அமைந்துள்ளன?
a. 47 b. 46 c. 44 d. 43 e. விடை தெரியவில்லை

126. கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட விக்கிரமச் சோழன் வாழ்ந்த நூற்றாண்டு
a. 11-ம் நூற்றாண்டு b. 12-ம் நூற்றாண்டு c. 9-ம் நூற்றாண்டு
d. 13-ம் நூற்றாண்டு e. விடை தெரியவில்லை

127. கதை மாந்தரின் வடச்சொல் பெயர்களை தொல்காப்பிய நெறிப்படி தமிழ்ப்படுத்தியவர்
a. கம்பர் b. தேவநேயப்பாவாணர் c. வீரமாமுனிவர்
d. கபிலர் e. விடை தெரியவில்லை

128. மலரின் எழுவகைப் பருங்களுள் நான்காவது பருவம் என்ன?
a. அலர் b. மலர் c. முகை d. வீ e. விடை தெரியவில்லை

129. கமலா சிரித்தாய் - இத்தொடரில் இடம்பெற்றுள்ள வழு எவ்வகையானது?
a. கால வழு b. எண் வழு c. திணை வழு
d. இடவழு e. விடை தெரியவில்லை

130. மக்கள் அனைவரும் _______ ஒத்த இயல்புடையவர்கள்
a. பிறப்பால் b. நிறத்தால் c. குணத்தால்

d. பணத்தால் e. விடை தெரியவில்லை

All people are the same by ________

a. birth b. colour c. traits

d. wealth e. Answer not known

131. கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியனும் - இதில் செம்பியன் எனக்குறிக்கப்படும் அரசன் யார்

a. இராசேந்திரன் b. இராசாதிராசன்

c. இராசமகேந்திரன் d. முதல் இராசராசன்

e. விடை தெரியவில்லை

132. பின்வருவனவற்றுள் வீரமாமுனிவர் எழுதாத நூல் எது?

a. ஞானோபதேசம் b. திருக்காவலூர்க் கலம்பகம்

c. தொன்னூல் விளக்கம் d. கந்தர் கலிவெண்பா

e. விடை தெரியவில்லை

133. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட ஆண்டு

a. 1730 b. 1772 c. 1780 d. 1831 e. விடை தெரியவில்லை

134. இக்கால ஔவையார் என திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்களால் பாராட்டப் பெற்றவர்?

a. அசலாம்பிகை அம்மையார் b. நீலாம்பிகை அம்மையார்

c. அஞ்சலையம்மாள் d. அம்புஜத்தம்மாள்

e. விடை தெரியவில்லை

135. 'பக்கிம்' என்ற வங்கமொழிச் சொல்லின் பொருள்

a. வளைந்த b. குறுகிய c. மறைந்த

d. அடிமை e. விடை தெரியவில்லை

136. ஜி.யு. போப் அவர்களின் தமையனார் பெயர் என்ன?

a. தாமஸ் b. முல்லர் c. ஹென்றி

d. ஜான் e. விடை தெரியவில்லை

137. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

1. பரணி தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று
2. ஆயிரம் யானைகளைப் போரில் வென்ற அரசனுக்காக பாடப்படும் இலக்கிய வகை
3. போருக்குரிய தெய்வம் காளி
4. இந்நூல் தோற்ற அரசனது நாட்டின் பெயரால் பாடப்படும்

சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடுக்க.

a. 1, 3, 4 சரி b. 1, 2, 4 சரி c. அனைத்தும் சரி

d. 1, 2, 3 மட்டும் சரி e. விடை தெரியவில்லை

 PH: 044 - 24339436, 42867555, 9840226187

138. பெரியார் பற்றிய தவறானக் கூற்றைத் தேர்வு செய்க?
1. சாதி ஏற்றத்தாழ்வுகளையும், மத மாறுபாட்டையும் அகற்ற பகுத்தறிவாளர் சங்கத்தை ஏற்படுத்தினார்
2. தம் வாழ்நாளில் 21,400 கூட்டங்களில் மக்களுக்காக உரையாற்றினார்
3. நடுவண் அரசு 1978-ம் ஆண்டு பெரியாரின் உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது
4. அறிவு என்பது வளர்ந்து கொண்டே இருக்கும்; எனவே, புதியவற்றை ஏற்க வேண்டும் என்றார்

a. 1 மற்றும் 2 b. 2 மட்டும் c. 1 மற்றும் 3
d. 2 மற்றும் 4 e. விடை தெரியவில்லை

139. படங்களைத் தந்த இரண்டாவது அகர முதலி.
a. செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகரமுதலி b. மதுரைத் தமிழ்ப் பேரகராதி
c. கிரியாவின் தற்கால தமிழ் அகராதி d. சென்னைப் பல்கலைக்கழக அகராதி
e. விடை தெரியவில்லை

140. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனக் குறளில் வள்ளுவர் கூற விழைவது __________
a. பிறப்பால் அனைவரும் சமம் b. தொழிலால் அனைவரும் சமம்
c. உரிமைகளால் அனைவரும் சமம் d. கடமைகளால் அனைவரும் சமம்
e. விடை தெரியவில்லை

In Kural "All men that live are" Thiruvalluvar aspire to say ______
a. Equal by birth b. Equal by profession
c. Equal by rights d. Equal by duties
e. Answer not known

141. கவிக்கோ அப்துல் ரகுமானின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் எது?
a. சுட்டுவிரல் b. பால்வீதி c. நேயர்விருப்பம்
d. ஆலாபனை e. விடை தெரியவில்லை

142. மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது – என்று உயிர்களின் வாழ்க்கை முறையைப் பற்றிக் கூறும் நூல்
a. திரிகடுகம் b. இனியவை நாற்பது c. திருக்குறள்
d. திருவருட்பா e. விடை தெரியவில்லை

143. சாதி இரண்டொழிய வேறில்லை என்றவர் யார்?
a. பாரதியார் b. ஔவையார் c. திருமூலர்
d. பொன்முடியார் e. விடை தெரியவில்லை

144. எள்ளல், இளமை, அறியாமை, மடமை ஆகிய நான்கு காரணங்களால் நகைச்சுவை தோன்றும் எனக் குறிப்பிடும் நூல் ________
a. புறநானூறு b. குறுந்தொகை c. தொல்காப்பியம்
d. நற்றினை e. விடை தெரியவில்லை

 PH: 044 - 24339436, 42867555, 9840226187

145. பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| A. மேல்செல்வனூர் | | | | 1. காஞ்சிபுரம் |
| B. கோடியக்கரை | | | | 2. சிவகங்கை |
| C. கரிக்கிளி | | | | 3. இராமநாதபுரம் |
| D. வேட்டங்குடி | | | | 4. நாகப்பட்டினம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

146. ஜி.யு.போப் ஆற்றிய பணிகளை அதற்கான ஆண்டுகளுடன் சரியாக பொருத்தவும்.

| | |
|---|---|
| A. திருக்குறள் மொழிபெயர்ப்பு | 1. 1842 – 1849 |
| B. சாயர்புரத்தில் கல்விப்பணி | 2. 1900 |
| C. திருவாசகத்தின் மொழிபெயர்ப்பு | 3. 1885 – 1908 |
| D. இங்கிலாந்தில் கல்விப்பணி | 4. 1886 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 2 | 3 | 4 | 1 |

e. விடை தெரியவில்லை

147. சங்க நூல்களுக்குப்பின் தோன்றிய நூல்களின் தொகுப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

a. பதினெண் மேல்கணக்கு
b. பதினெண்கீழ்க்கணக்கு
c. ஐம்பெரும் காப்பியங்கள்
d. ஐஞ்சிறு காப்பியங்கள்
e. விடை தெரியவில்லை

148. உவமானத்தின் தன்மைகளை உவமேயத்தில் ஏற்றிக் கூறுவது

a. உவமையணி
b. உருவக அணி
c. இயல்புநவிற்சி அணி
d. எடுத்துக்காட்டுவமையணி
e. விடை தெரியவில்லை

149. குமரகுருபரர் இறைவனது திருவடியை அடைந்த இடம்

a. திருப்பனந்தாள்
b. திருவைகுண்டம்
c. காசி
d. திருச்செந்தூர்
e. விடை தெரியவில்லை

 PH: 044 - 24339436, 42867555, 9840226187

150. பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டில் வைந்து
மேற்காணும் குறளில் ‘ஏமம்’ என்பதன் பொருள் யாது?
a. விளைச்சல் b. பாதுகாப்பு d. நீதி
d. நன்மக்கள் e. விடை தெரியவில்லை
In the above said Kural the term ‘ஏமம்’ means
a. Fertility b. Defence d. Justice
d. Good Citizens e. Answer not known

**APPOLO STUDY CENTRE**
**No.25, Nandhi Loop Street,**
**West C.I.T. Nagar, Chennai – 600 035**
**Near T. Nagar Bus Stand,**
**Landmark: Nandhi Statue**
**Ph: 24339436, 42867555, 9840226187**
**E-mail: appolotnpsc@gmail.com**
**Website: www.appolosupport.com**
**www.appolotraining.com**

# GEAR UP SERIES

## TEST X – 6, 7, 8TH STD GENERAL TAMIL

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **C** | **C** | **B** | **A** | **C** | **A** | **A** | **C** | **D** | **B** |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **B** | **C** | **D** | **A** | **A** | **B** | **B** | **B** | **A** | **B** |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| **B** | **C** | **A** | **B** | **B** | **B** | **A** | **C** | **B** | **A** |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| **D** | **A** | **C** | **B** | **D** | **D** | **B** | **B** | **C** | **C** |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| **B** | **D** | **C** | **C** | **B** | **B** | **B** | **B** | **A** | **A** |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| **B** | **A** | **D** | **C** | **B** | **B** | **C** | **B** | **D** | **D** |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| **A** | **C** | **C** | **B** | **D** | **C** | **A** | **B** | **B** | **B** |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| **C** | **A** | **A** | **C** | **D** | **C** | **B** | **C** | **B** | **A** |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| **A** | **B** | **B** | **B** | **D** | **C** | **B** | **B** | **B** | **C** |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| **C** | **A** | **C** | **C** | **C** | **B** | **C** | **A** | **D** | **D** |
| 101 | 102 | 103 | 104 | 105 | 106 | 107 | 108 | 109 | 110 |
| **D** | **A** | **B** | **B** | **D** | **C** | **A** | **B** | **D** | **D** |
| 111 | 112 | 113 | 114 | 115 | 116 | 117 | 118 | 119 | 120 |
| **C** | **A** | **C** | **A** | **D** | **B** | **C** | **A** | **A** | **B** |
| 121 | 122 | 123 | 124 | 125 | 126 | 127 | 128 | 129 | 130 |
| **B** | **C** | **D** | **A** | **C** | **B** | **A** | **B** | **D** | **A** |
| 131 | 132 | 133 | 134 | 135 | 136 | 137 | 138 | 139 | 140 |
| **A** | **D** | **C** | **A** | **A** | **C** | **C** | **B** | **A** | **A** |
| 141 | 142 | 143 | 144 | 145 | 146 | 147 | 148 | 149 | 150 |
| **D** | **B** | **B** | **C** | **C** | **C** | **B** | **B** | **C** | **B** |